| **உறுதிமொழி # 3: குடிமக்கள் மத்தியில் தகவல் அறியும் உரிமையை அதிகரித்து, 2020 அளவில் தகவல் அறியும் உரிமை நடைமுறையாக்கத்திற்கு அரச நிறுவனங்களின் எதிர்வினையை மேம்படுத்தல்.** | |
|---|---|
| 1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020 | |
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | தகவலுக்கான உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைச்சு |
| **உறுதிமொழி விளக்கம்** | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | தகவலுக்கான அணுகும் வசதி என்பது இலங்கை மக்களின் அரசியலமைப்பு உரிமையாகும். தமக்கு உரித்தான சேவைகள் தொடர்பில் பொது அதிகாரிகளிடமிருந்து தகவலை நாடுவதற்கு மற்றும் முறைப்பாடுகளின் தேர்ச்சியை அறிவதற்கு தகவல் அறியும் உரிமையை பயன்படுத்துவதற்கான,இலஞ்சம் செலுத்துவதற்கான தேவையின்றி தமது குறைகளை நிவர்த்தி செய்வதற்கான, பொது நிறுவனங்களை பொறுப்புடையதாக்குவதற்கான ஆற்றல் குடிமக்களுக்கு உள்ளது. எவ்வாறாயினும், வரையறுக்கப்பட்ட விழிப்புணர்வின் காரணமாக, தகவல் அறியும் உரிமையை பயன்படுத்தும் குடிமக்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கின்றது. முறையான மற்றும் அணுகக் கூடிய விதத்தில் அறிக்கைகள் பேணப்படவில்லை என்பதே பொது மக்கள் விழிப்புணர்வின்மைக்கு வழிகோலும் விடயமாக உள்ளது.தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களின் குறிப்பிட்ட வகைகளை செயற்றிறன் மிக்க வகையில் வெளியிடுவது அத்தியாவசியமாகும். ஆனால், சட்டத்தின் மிகவும் மோசமான நடைமுறைப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளில் ஒன்றாகவும் அது காணப்படுகின்றது. |
| உறுதிமொழி என்ன? | தகவல் அறியும் உரிமையின் கீழ் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க குடிமக்களின் சந்தர்ப்பங்களை பரவலாக்குவதும், அத்தகைய விண்ணப்பங்களுக்கு பொது அதிகாரிகளின் பதிலளிக்கும் தன்மையை மேம்படுத்துவதும், அதன் மூலம் சேவை விநியோகத்தை மேம்படுத்தல், ஊழலை வெளிப்படுத்தல் மற்றும் தீர்மானம் எடுத்தலில் பங்குபற்றலை ஊக்குவித்தல் என்பவற்றை நோக்கி பங்களிப்பதும் இந்த உறுதிமொழியின் நோக்கமாகும். |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | 50 வீதமான பொது அதிகார சபைகளை பட்டியலிட்டு, மாற்றுத்திறனுடையவர்களும் அணுகக் கூடிய தகவல் அறியும் உரிமை கோரிக்கை தளம் ஒன்றினை அமைச்சு தயாரிக்கும். அத்தகைய இணைய தளம் ஒன்று அரசாங்கத்தினால் நடத்தப்படுகின்ற நிலையில்,பெரும்பாலான பொது அதிகார சபைகள் பட்டியலிடப்பட்டுள்ள நிலையில்,மாற்றுத்திறனாளிகள் உள்ளடங்கலாக, குடிமக்களின் அணுகும் தன்மையை அது அதிகரிக்கும். 50 வீதமான பொது அதிகார சபைகளில் இணைய பதிவு முகாமைத்துவ முறைமைகள் அறிமுகப்படுத்தப்படும். இணைய பதிவு முகாமைத்துவத்திற்கு கிடைக்கக் கூடியதாகவுள்ள தகவல்களை எண்ணிமப்படுத்தப்படல் வேண்டும். அது மக்களுக்கு பெரும் அணுகும் வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும்.தகவல் அறியும் உரிமையை பயன்படுத்தும் மக்களின் அளவினை அதிகரிக்கும் மற்றும் செயற்றிறன் மிக்க வகையிலும், தகவல் அறியும் உரிமைக்கான பதிலாக பொது அதிகார சபைகளின் பதில் வழங்குதலை அதிகரிக்கும் நோக்குடன் விரைவுபடுத்தப்பட்ட விழிப்புணர்வு ஏற்படுத்தல் நிகழ்ச்சி முன்னெடுக்கப்படும்.ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் மக்களுக்கான விழிப்புணர்வு-அதிகரித்தல் நிகழ்ச்சியை அமைச்சு முன்னெடுக்கும். அத்தகைய நிகழ்ச்சிகளின் விளைவாக, முந்தைய வருடங்களில் ஒப்பிடப்பட்ட பகுதிகளில் பதிவு செய்யப்பட்ட தகவல் அறியும் உரிமை விண்ணப்பங்களை அதிகரிக்க அமைச்சு எதிர்பார்க்கின்றது.தகவல் அறியும் உரிமை தளத்தில் கட்டாய செயற்றிறன் மிக்க வெளிப்படுத்தல் ஏற்பாடுகளுடன் இணைந்ததாக 15 பொது அதிகார சபைகளுடன் அமைச்சு பணியாற்றுகின்றது. |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | தற்போதைய தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஏற்பாடுகளை வலுப்படுத்தும் என்பதால் **தகவலுக்கான அணுகும் வசதி**யின் பெறுமதியை இந்த உறுதிமொழி அடையாளப்படுத்துகின்றது. வெறும் பார்வையாளர் என்பதிலிருந்து, ஆட்சிமுறையின் செயற்றிறன் மிக்க பங்குபற்றுனர்களாக மாறுவதாக குடிமக்களின் வகிபாகத்தை மாற்றுவதால் **பொதுமக்கள் பங்குபற்றலை** அது பரவலாக்குகின்றது.பொது அதிகார சபைகள் எதிர்பார்த்த முடிவுகளை வழங்குகின்றனவா என குடிமக்கள் மதிப்பீடு செய்யவும், தீர்மானிக்கவும் |

<table>
<tr><td colspan="2"></td><td colspan="3">முடியும் என்பதால் பொதுமக்கள் பொறுப்புடைமையையும் அது முன்னிறுத்துகின்றது.</td></tr>
<tr><td colspan="2">மேலதிக தகவல்:</td><td colspan="3">2016ம் ஆண்டு 12ம் இலக்க தகவல் அறியும் சட்டத்தின் செயற்பாட்டினை இந்த உறுதிமொழி வலுப்படுத்தும். நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி இலக்கு இல. 16உடன் இசைந்ததாக அது இருக்கும். அத்துடன், உத்தேச தேசிய ஊழலுக்கு எதிரான மூலோபாயங்களுக்கு இசைவானதாகவும் இருக்கும்.</td></tr>
<tr><td colspan="3">சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை</td><td>ஆரம்ப திகதி:</td><td>முடிவுத் திகதி:</td></tr>
<tr><td colspan="3">1. ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்ட 10 பொது நிறுவனங்களுடன், தகவல் மற்றும் தொலைத்தொடர்புகள் தொழிநுட்ப நிறுவனம் / ஏனைய ஒப்பந்த நிறுவனங்கள், மற்றும் பட்டியலிடப்பட்ட 50 வீதமான அனைத்து பொது அதிகார சபைகளின் ஆதரவுடன், தேசிய நடவடிக்கைத் திட்ட காலத்தின் இறுதியில் அணுகக் கூடிய வகையில் திட்டமிடல் அமைச்சினால் மாற்றுத்திறனாளிகளும் பயன்படுத்த இலகுவான தகவல் அறியும் உரிமை கோரிக்கை தளம் ஒன்று உருவாக்கப்படும். தளத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் பயனர் மற்றும் மாற்றுத்திறனுக்கு இணக்கமான அளவினை அறிவதற்கு அமைச்சு பரிசோதனை ஒன்றை முன்னெடுக்கும். தளம் தொடர்பில் பால்நிலைசார் தரவினையும் தளம் பின்தொடரும்.</td><td>ஒக்டோபர் 2018</td><td>ஜுன் 2019</td></tr>
<tr><td colspan="3">2. இணைய பதிவு முகாமைத்துவ முறையானது 10 பொது அதிகார சபைகளுக்கு விருத்தி செய்யப்பட்டு, அறிமுகப்படுத்தப்படும். தேசிய நடவடிக்கைத் திட்ட காலத்தின் இறுதியில் அனைத்து பொது அதிகார சபைகளிலும் 50 வீதமாக பொது அதிகார சபைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.</td><td>நவம்பர் 2018</td><td>ஆகஸ்ட் 2020</td></tr>
<tr><td colspan="3">3. தகவல் அறியும் உரிமை ஆணைக்குழவின் வருடாந்த அறிக்கைக்கு அமைய 30 ஆகஸ்ட் 2019 அன்று,முந்தைய வருடத்தில் முன்வைக்கப்பட்ட தகவல் அறியும் உரிமை கோரிக்கையில் மற்றும் வழங்கப்பட்ட தகவல்களில் 50 வீத அதிகரிப்பு இருக்கும். 30 ஆகஸ்ட் 2020 அளவில் 2019 அடிமட்டத்தில் 75 வீத அதிகரிப்பு இருக்கும். வெகுசன ஊடக அமைச்சினால் பொது அணுகும் வசதிக்கான சாரம்ச தரவுத் தாள் கிடைக்கக் கூடியதாகவிருக்கும்.</td><td>நவம்பர் 2018</td><td>ஆகஸ்ட் 2020</td></tr>
<tr><td colspan="3">4. குடிமக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சிவில் சமூக நிறுவனங்களுடனான கலந்தாய்வில் வெகுசன ஊடக அமைச்சானது,ஒவ்வொரு தேசிய நடவடிக்கைத் திட்ட வருடத்திலும் 5 தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்கள், 5 மாவட்டச் செயலகங்கள் மற்றும் 5 அமைச்சுக்களை வழிநடத்தும். அத்துடன், தமது சம்பந்தப்பட்ட இணையத் தளங்களிலும், அலுவலக வளாகங்களிலும் மாதாந்த அடிப்படையில் வர்த்தமானி இல. 66/2004 இன் விதிமுறை 20இற்கு அமைய முனைப்பான தகவல்களை கிடைக்கக் கூடியதாக செய்யும். ஒவ்வொரு வருடமும் இந்த பொது அதிகார சபைகளின் பெயர்கள் பகிரங்கப்படுத்தப்படும்.</td><td>நவம்பர் 2018</td><td>ஆகஸ்ட் 2020</td></tr>
<tr><td colspan="5">தொடர்புத் தகவல்</td></tr>
<tr><td colspan="2">நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்:</td><td colspan="3">ஆள திலக்கா ஜயசுந்தர</td></tr>
<tr><td colspan="2">பதவி நிலை, திணைக்களம்</td><td colspan="3">மேலதிக செயலாளர், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு</td></tr>
<tr><td colspan="2">மின்னஞ்சல், தொலைபேசி</td><td colspan="3">தொலை: 0112513459 0112513460<br>கைத்தொலைபேசி:0766632368</td></tr>
<tr><td rowspan="2">சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள்</td><td>சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள்</td><td colspan="3">பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு, உள்நாட்டலுவல் அமைச்சு, தகவல் தொழில்நுட்ப அமைச்சு தகவல் அறியும் உரிமை குறித்த ஆணைக்குழு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகம் (ICTA)</td></tr>
<tr><td>CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள்</td><td colspan="3">TISL மற்றும் ஏனைய ஈடுபட்டுள்ள CSO க்கள்</td></tr>
</table>